ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

# கரூர் மாவட்ட நிகழ்கலை கைவினைப் பொருட்கள்

இரா.ராஜசங்கரி[1] & முனைவர்.ஐ.பிரேமலதா[2]
[1]முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
[2]இணைப்பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்
தமிழ்த்துறை
அரசுகலைக் கல்லூரி (தன்னாட்சி)
சேலம் - 636 007.
மின்னஞ்சல் - rajasankarir1980@gmail.com

11

**ஆய்வுச் சுருக்கம்:**

மரபு வழிப்பட்ட தொழில்களில் நிகழ்கலை அம்சத்துடன் விளக்குவது சங்ககால கலைகளின் ஒன்றான கைவினைக் கலைகளாகும் நம்முன்னோரிடம் இருந்தே மக்கள் இக்கலைகளைச் கற்றுக் கொண்டனர். இதில் கரூர் மாவட்ட மக்கள் தங்கள் கலைத்துறைக் காட்டி பல பொருட்களைச் செய்துள்ளனர். பரம்பரை பரம்பரையாக செய்து வருகின்ற பொருட்களும் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இன்றைக்கும் நம் வாழ்வியலில் பயன்படுத்திக் கொண்டதான் இருக்கிறார்கள். கரூர் மாவட்ட மக்கள் எந்தந்த கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்து உலகமே பாரட்டும் அளவிற்கு அமைந்துள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

**திறவுச் சொற்கள்:**

மண்பாண்டக் கலை, களிமண் பொம்மைகள், பொம்மைகள் கலை, மரவேலைப்பாடுகள், பாய் மற்றும் கூடை பின்னுதல், உலோக சிற்ப வேலைப்பாடு, கல் சிற்ப வேலைப்பாடு, நெசவுத் துணிக்குச் சாய மேற்றும் கலை, அணிமணிகள் கலை.

**முன்னுரை:**

மனிதன் இயற்கையான வாழ்க்கையை இயல்பாகத் தோன்றி எளிமையாக வளர்ந்து உண்மையான உணர்ச்சிகளின் உறைவிடமாகப் பாமர மக்களின் பாரம்பரிய கலைகளை நாட்டுப் புற கலைகள் எனலாம். தொடக்க காலத்தில் மனிதன் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்தான். பின்பு காலங்கள் மாறின மாற்றங்கள் தோன்றின வசதிகள் வாய்ப்புகள் அமையும் இடங்களில் குடியமர்ந்து உணவுக்கு தேவையான தொழில்களைச் செய்து வந்தான். அதில் கரூர் மாவட்ட மக்கள் எந்தெந்த நிகழ்கலை கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றின் தோற்றம் வளர்ச்சி நிலை, இவற்றைப்பற்றி இக்கட்டுரையில் தெரிந்துக்கொள்ள முடியும்.

**நிகழ்கலைகளின் தோற்றம்:**

சங்க காலத்தில் தமிழர்களின் பாரம்பரிய நாட்டார் கலை வடிவங்களில் ஒன்று கிராமத்தின் மண்வாசனையும், கிராம மக்களது வாழ்வாதாரங்களையும், அவர்கள் மதம் மீது கொண்ட பற்றுதலையும் நிகழ்கலை அமைகிறது.

பண்டையக்கால மனிதன் முதல் கிராமம் கலையின் தாயகமாகவும், தொன்மையாகவும் சிறப்புடன் இருக்கிறது. கலை கிராமத்தின் சமூக வாழ்க்கையில் அது தனக்கென்று ஒரு மாபொரும் இடத்தை பெற்றிருக்கிறது.

பின்பு காலத்தின் பரிணாமங்களைப் பெற்று கலைகளாகத் தோற்றம் பெற்றது. அவர்கள் அன்றும் இன்றும் நிகழ்கலை கைவினைப்பொருட்கள் மக்களின் எளிய வாழ்கையையும், கள்ளமற்ற உள்ளத்தையும் நிலைநிறுத்தியுள்ளது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**நிகழ்கலைகளின் வளர்ச்சிப் படிகள்:**

பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக உருவாக்கப்பட்டிருந்தாலும் இந்தக் கலைகள் தற்போதைய சமூகத்தினரையும் ஈர்ப்பவையாக அமைந்துள்ளது அதில் மண் பாண்டக்கலை, பொம்மைகள் கலை, பிற வேலைப்பாடு கலை, பாய் பின்னுதல், உலோக வேலைபாடு கலை, சிற்பு வேலைப்பாடு கலை, கல்சிற்ப வேலைப்பாடு, நெசவுத்துணிக்குச் சாய மேற்றும் கலை, அணிமணிகள் கலை என்று படிப்படியாக தோன்றி இன்றைக்கும் கலை வளர்ச்சி அமையாத பழங்குடி மக்கள், நாட்டுப்புற மக்கள், நாகாரி க மக்கள் இவர்களின் கலை இயல்புகளைக் கொண்டு கரூர் மாவட்ட மக்கள் சமூக அமைப்பு காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடமும் மாறுதலாக உணா;ச்சி உள்ளத்தின் வெளிப்பாடு, அறிவு வளர்ச்சியால் விதிகளும் கட்டுப்பாடுகளும் தோன்றி தன்னுடைய வாழ்வாதாரங்களை மேம்படுத்தினர்.

மனித மன வளர்ச்சியை மானிடவியல் மூலம் அறிந்து கொள்ளலாம். இத்தகைய பாதிப்புகள் கலைவுலகையும் மிகப்பழங்கால மனிதனின் கலைகள் இடத்துக்கு இடம் மாறுபடுவதை தொரி ந்து கொள்ள முடியும். அதன் அடிப்படையில் கரூர் மாவட்ட மக்களிடம் இந்த நிகழ்கலைகள் சிறப்பாகவும், பண்பாடு, பாரம்பரியம் குன்றாமல் நிகழ்ந்துக்கொண்டு இருக்கிறது என்றே கூறவேண்டும்.

**மண்பாண்டக் கலை:**

கரூர் மாவட்டத்தில் பெரும் பான்மையான ஊர்களில் மண்பாண்டத் தொழில் நடைப் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இத்தொழில் முது மக்கள் தாழிகளும் உடைந்த பாண்டத் துண்டுகளும் பண்டைக்கால மக்களின் கைவினைக் கலையின் சிறப்புகளை நமக்கு எடுத்துரைக்கிறது. இத்தொழில் செய்பவர் குயவர் ஆவார்கள். சங்க காலத்தில் இவர்களை ‘கலம் செய்வோர்”, மண்ணிப்பாளர் என்று அழைக்கப்பட்டனா;. மேலும் சங்க காலத்தில் குழிசி, சாடி, கலன், கன்னல், தசும்பு, மண்டை என்று பல்வேறு மண்பானைகள் செய்யப்பட்டன. இதில் கரூர் மாவட்டத்திலும் பலவிதமான மண்பானைகள் செய்யப்பட்டு வருகிறது.

களி மண்ணால் தெய்வ உருவங்களை செய்வதில் இவர்களைத் தவிர வேறு யாரும் கலை நயத்துடன் செய்ய முடியாது. அய்யனார் மாரியம்மன் தெய்வ உருவ சிற்பங்களும், மண் குதிரைகள், அழகிய பொம்மைகள், குதிர்கள், ஜாடிகள், வீட்டிற்குத் தேவையான சமையல் பாத்திரங்கள் ஆகியவற்றை மண்ணால் பல வண்ணங்களிலும் வடிவங்களிலும் தயாரிக்கப்படும் பாண்டங்கள் கண்ணையும் கருத்திணையும் கவருவதுடன் அவர்கள் பொறுமையான குணங்களை இதில் புரிந்து கொள்ள முடிகிறது. 1

**களிமண் பொம்மைகள் மற்றும் காகித பொம்மைகள்:**

களிமண்களில் பொம்மைகள் அதே போல காகித்தைக் கொண்டு பொம்மைகள் செய்கின்றனர். இன்றைய நாகாரி கப் போக்கிற்கேற்பக் காதிதப் பொம்மைகள் கலை வளர்ச்சி அடைந்துள்ளது என்றே கூறவேண்டும். 2

**மரவேலைப்பாடுகள்:**

கரூர் கிராமங்களில் மட்டுமல்ல நகர்ப் புறங்களிலும் தச்சு வினைகள் சிறப்பாக உள்ளது. வீட்டிற்குத் தேவையான மேசை நாற்காலி, உழவுத் தொழிலுக்குத் தேவையான கலப்பை உள்ளிட்ட பொருட்கள் சில ஊர்களில் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் தச்சுத் தொழிலாளர்கள் கோயில் தேர் தோரி ன் சக்கரங்கள், சப்பரம் இவற்றை கரூர் மாவட்ட பகுதியில் கடம்பர் கோயில், அய்யர் மலை, பசுபதிஸ்சுவரர் மேலும் மிகவும் சிறப்புக் இப்படி சிறப்புக் கொண்ட தேர் திருவிழாவின் போது அதன் கலை நயத்தையும், நேர்த்தியையும், திறமை கொண்டவர்களாக இருக்கின்றனர். இக்கலை பன்னெடுங்காலமாக சிறப்புப் பெற்று இன்றைக்கும் நிலைத்து நிற்கிறது. 3

**பாய் மற்றும் கூடை பின்னுதல்:**

கரூர் மாவட்டத்தில் ஒரு சில ஊர்களில் கோரையை பயிர்ச் செய்து அதைச் செய்யும் தொழில் தலைமுறையாக இன்றும் நடைபெற்று வருகின்றது பனை ஓலையால் கூடை முடைதலும், தொழிலாக செய்து வருகின்றனர். தட்டு, கோழிக் கூண்டுகள், காடை கௌதாரி பிடிக்க உதவும் வகைகள் போன்றவற்றையும் செய்கின்றனர்.

பிரம்பு, நாணல், ஈச்சமிலாறு, பிளிச்சமிலாறு, ஈச்ச மரத்துப்பட்டை, மூங்கில் என்று கூடைப் பின்னி வருகின்றனர். தென்னைமரத்து மட்டையிலிருந்து நார் உரித்து அந்த நாரில் கயிறு திரிக்கின்றனர். 4

**உலோக சிற்ப வேலைப்பாடு கலை:**

உலோகங்களில் தெய்வம் சிலைகளும் பாவை விளக்குகளும் கரூர் மாவட்டத்தில் கி.பி.12 நூற்றாண்டில் இருந்தே இருந்தது என்பது மிகையாகாது. கல்வினால் செய்யப்படும் சிலைகள் போலவே உலோகங்களிலும் சிலைகள் செதுக்கப்பட்டு வருகின்றது. இங்கு செம்பு, வெள்ளி, வெண்கலம், பஞ்ச உலோகம் முதலிய உலோகங்களில் மிக நுட்பமான வேலைப்பாடுகள் கூடிய சிலைகள் உற்பத்திச் செய்து வருகின்றனா; உருவங்களோடு, விளக்குகள், பூசைப் பொருட்களும் மிக தொழில்நுட்பத்துடன் செய்து வருகின்றனர். 5

**கல்சிற்ப வேலைபாடு கலை:**

கரூர் மாவட்டத்தில் சிற்பங்கள்; செதுக்கும் தொழில் இன்றைக்கும் உள்ளது. தலைவர்கள், கிராம தெய்வங்கள் என்று கல்லில் செதுக்கி விற்கின்றனர். மேலும் வீரர்களின் திறமையை வெளிகாட்டும் விதத்தில் போரிட்ட முறை கருங்கல்லில் ஓவியமாகவும், வீரமரணம் அடைந்தலர்களுக்கு நடுகற்கள் நடுவது என்றும் பலவிதமான கல் கலை சிற்பங்களை பத்திரமாக பாதுகாத்து இன்றைக்கும் ஒரு பாரம்பரி ய கலைகளில் ஒன்றாக மதிக்கப்படுகிறது. 6

**நெசவுத் துணிக்கும் சாயமேற்றும் கலை:**

நெசவுக்கலையோடு இந்த சாய மேற்றும் கலை சங்க இலக்கியம் சீவக சிந்தாமணி பெருங்கதை நூல்களில் அறிப்படுகின்றன. நெசவு மற்றும் கைத்தறிக்குப் பெயர் பெற்ற கரூரில் வீதிக்கு வீதி துணிகளுக்கு சாயமேற்றும் தொழில் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. துணிகளை நெய்தல் அவற்றில் ஓவியங்கள் தீட்டுதல் என்று பல விதமாக பழங்காலத்தில் இருந்தே இந்த கலைகளை காண முடியும். 7

**அணிமணிகள் செய்தல்:**

தங்கம் மற்றும் வெள்ளி உலோகங்களைக் கொண்டு நகைச் செய்யும் ஆசாரிகள் கரூர் மாவட்டத்தில் நிறைய உள்ளனர். அனைத்து இனத்தவரும் இந்த தொழிலைக் கற்றுக் கொண்டு பல விதமான அணிமணி கலை செய்து வருகின்றனர்.

இப்படி சங்ககாலம் முதல் இன்றைய காலம் வரை கரூர் மாவட்ட மக்களிடம் நிகழ்கால கலைகள் காலத்திற்கு உகந்தது போல் மென்மேலும் வளர்ச்சி பெற்று மிகப் பெரிய அளவில் கரூர் மாவட்டத்தில் சிறப்புப் பெற்று திகழ்கிறது என்று இந்த நிகழ் கலை மரபு தோற்றத்தையும் அதன் வளர்ச்சியையும் அறிந்த கொள்ள முடிகிறது. 8

**முடிவுரை:**

மரபு வழிப்பட்ட தொழில் கலைகலும் கரூர் மாவட்டத்தில் சங்க காலம் அன்றை காலகட்டத்திற்கும், இன்றைய காலத்திற்கும் நாகரீக மாற்றம் அடைந்த போதும் அதன் சிறப்புகள்,

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பண்புகள், பாரம்பரியம் குறையாமல் கிராமப்புற மக்கள் மற்றும் நகர்புற மக்களின் இன்றியமையாத வாழ்வுடன் இந்த நிகழ்கால மரபு கலைகள் இணைந்துள்ளது என்பது தொரி ந்து கொள்ள முடிகிறது.

**மேற்கோள்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | முனைவர் சு.சக்திவேல் | நாட்டுப்புற இயல் ஆய்வு | பக் -185 |
| 2. | மேலது | | பக் -185 |
| 3. | பேரா.சி.சக்திவேல் | கரூர் நாட்டுப்புற வழக்காற்றியல் | பக் -109 |
| 4. | மேலது | | பக் -111 |
| 5. | மேலது | | பக் -110 |
| 6. | முனைவர் சு.சக்திவேல் | நாட்டுப்புற இயல் ஆய்வு | பக் -186 |
| 7. | பேரா.சி.சக்திவேல் | கரூர் நாட்டுப்புற வழக்காற்றியல் | பக் -110 |
| 8. | மேலது | | பக் -111 |

**துணைநூற் பட்டியல்**

1. முனைவர் சு.சக்திவேல்,நாட்டுப்புற இயல் ஆய்வு,மணிவாசகர் பதிப்பகம்,31, சங்கர் தெரு, பாரிமுனை,சென்னை - 600 108.

2. பேரா. சி. சக்திவேல் ,கரூர் நாட்டுப்புற வழக்காற்றியல்,காவ்யா பதிப்பகம்,16, இரண்டாம் குறுக்குத் தெரு,பிரஸட்புரம் கோடம்பாக்கம்,சென்னை - 600 024.

3. முனைவர் ஏ.என். பெருமாள் ,தமிழக நாட்டுப்புறக் கலைகள்,உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,II வது மெயின் ரோடு, C.I.T. வளாகம், T.T.T.I அஞ்சல், சென்னை - 600 113.

4. பேரா.சு. சண்முகசுந்தரம்,நாட்டுப்புறவியல்,காவ்யா பதிப்பகம், 16, இரண்டாம் குறுக்குத் தெரு டிரஸ்ட்புரம்,கோடம்பாக்கம், சென்னை - 600 024.

5. முனைவர் ஆ.பூபாலன்,தமிழர் மரபு வி.ஆர்.பி.பதிப்பகம்,பிரைவேட் லிமிடெட்,6/50, வெங்கடேசா நகர் முதல் தெரு, விருகம்பாக்கம், சென்னை - 600 092